# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109707

1. District : Nilgiris — PS: V&AC — Year: 2021 — FIR No.: 07 — Date: 03.12.2021
மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — மு.த.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 ammended as — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) & 13(1)(a)
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: IPC — Sections பிரிவுகள்: 409.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை prior to 02.12.2021
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 14.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.12.2021 — Time நேரம் : 11.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — — Time நேரம் : —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Jegathala Town panchayat office about 12km North East.
Beat Number : முறைக் காவல் எண் — — (b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. KUMARARAJA — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் —
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Special Tahsildar (SSS) — (g) Address : முகவரி Taluk office, Udhagamandalam.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. V. Karumalaiappan, Junior Assistant, Town panchayat office, Jegathala
2. R. Kirthika, Sanitary worker, Town panchayat office, Jegathala.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: No delay.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 31/01/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 31/01/2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.SUBASHINI.
Rank: நிலை ....DSP.........No. எண் ..........

**ஊ.த.க.பிரிவு கு.எண்.7/2021/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-**

கனம் உதவி அமர்வு நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 03.12.2021 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் M.சுபாஷிணி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், சமூக பாதுகாப்பு திட்டம், தனி வட்டாட்சியர் பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலர் திரு.R.குமாரராஜா அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு: அனுப்புநர் R.குமாரராஜா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர், பார்வை: 1) நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை எண்.Pdl.A1.No.30/2021 நாள்: 02.12.2021. நீலகிரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) ஆகிய நான், 02.12.2021-ம் தேதி நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகா, அருவங்காடு, ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள செயல் அலுவலர் மற்றும் அலுவலர்கள் பதிவு செய்யப்படாத மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் துப்புறவு பணியாளர்களை வைத்து அரசு கணக்கிலிருந்து பணத்தை எடுப்பதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், நான் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.M.சுபாஷிணி மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் அவ்வலுவலகத்தை 02.12.2021 ஆம் தேதி மதியம் 14.30 மணிமுதல் 19.15 மணிவரை திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த திடீர் சோதனையில் 1) கணக்கில் வராத பணம் ரூ.4,53,600/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து அறநூறு மட்டும்), பதிவறை எழுத்தர் திரு.ஆதில் ஷெரிப் என்பவரால் பராமரிக்கப்பட்டு வரும் 1) சான்றொப்பமிட்ட அலுவலக பணியாளர்களின் வருகைப்பதிவேட்டின் நகல் (பக்கம் 13), 2) சான்றொப்பமிட்ட பரப்புரையாளர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 13), 3) சான்றொப்பமிட்ட துப்புறவு பணியாளர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 13), 4) சான்றொப்பமிட்ட

DSP 3/12/2021.

குடிநீர் விநியோக பணியாளர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 13) ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இளநிலை உதவியாளர் திரு.கருமலையப்பன் அவர்களால் பராமரிக்கப்பட்டு வரும் 1) சான்றொப்பமிட்ட 30.11.2021-ம் தேதியிட்ட நாளேடு (Day Book), 2) சான்றொப்பமிட்ட வெண்பா சுய உதவிக்குழுவின் தற்காலிக துப்புறவு பணியாளர்களுக்காக பராமரிக்கப்பட்டு வரும் வருகைப்பதிவேடு (பக்கம் 6, 7), 3) கனரா வங்கியின் Executive Officer Jegathala என்ற அசல் காசோலை புத்தகம் 738801 முதல் 738900 வரை (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 738801 முதல் 738823 மற்றும் 738825 முதல் 738841 வரை), 4) ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி வெண்பா குழுவின் Bank Payment Voucher அசல் (6 தாள்கள்), 5) ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி லில்லிமலர் குழுவின் Bank Payment Voucher அசல் (5 தாள்கள்), ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. துப்புறவு பணியாளர் திருமதி.கிருத்திகா என்பவரிடமிருந்து 1) வெண்பா குழுவின் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 010921 முதல் 011020 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 010921 முதல் 010986 மற்றும் 010988 முதல் 011007), 2) திருமதி.பரமேஸ்வரி என்பவருடைய தனிநபர் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 016221 முதல் 016240 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 016221 முதல் 016231), 3) லில்லிமலர் SHG குழுவின் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 014521 முதல் 014540 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 014521 முதல் 014534 மற்றும் 014535 முதல் 014538), 4) திருமதி.ரதி என்பவருடைய தனிநபர் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 016481 முதல் 016500 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 016481 மற்றும் 016482), 5) சான்றொப்பமிட்ட நவம்பர் மாதத்திற்கான வெண்பா குழுவின் தற்காலிக துப்புறவு பணியாளர்களுக்கு வங்கியில் ECS மூலம் மாத சம்பளம் செலுத்தியதற்கான பட்டியல் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கை சம்மந்தமாக செயல்முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த செயல்முறையினையும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,53,600/- மற்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை இன்று 03.12.2021-ம் தேதி காலை 11.30

DSP 3/12/2021.

மணிக்கு ஆஜர் செய்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் R.குமாரராஜா 03.12.2021. Submitted Received the above typed complaint on 01.11.2021 at 11.30 hrs and registered a case in The Nilgiris Detachment Cr.No.6/2021/AC/NI u/s 409 IPC, 13(2) r/w 13(1) (c) and 13(1) (a) of PC Act 1988 as amended as PC (Amendment) Act 2018 ஒப்பம் M.சுபாஷிணி 03/12/2021 Deputy Superintendent of Police, (V & AC), The Nilgiris Detachment. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 02.12.2021 between 14.30 hrs and 19.15 hrs at the office of the Executive Officer, Jegathala Town Panchayat (Selection Grade), Aruvankadu, Kotagiri Taluk, The Nilgiris District. முன்னிலை: 1) R.குமாரராஜா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம், பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.M.சுபாஷிணி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 02.12.2021-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.R.குமாரராஜா ஆகிய நான் நீலகிரி மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்படி நீலகிரி மாவட்ட பொறுப்பு மாவட்ட ஆய்வு குழு அலுவலராக பணியிலிருந்து கொண்டு அரசு அலுவலகங்களில் நடைபெறும் ஊழல் தொடர்பான நிகழ்வுகளை கண்காணித்துக் கொண்டிருந்தபோது, எனக்கு கிடைத்த இரகசிய தகவலில் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகா, அருவங்காடு, ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள செயல் அலுவலர் மற்றும் அலுவலர்கள் பதிவு செய்யப்படாத பெயரில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் துப்புறவு பணியாளர்களை வைத்து அரசு கணக்கிலிருந்து பணத்தை எடுப்பதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், நானும் உதகமண்டலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.M.சுபாஷிணி மற்றும் காவல்துறையினர் சகிதம் இன்று (02.12.2021) மதியம் 14.30 மணிமுதல் ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த திடீர் சோதனையின் போது ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சியானது அருவங்காட்டிலிருந்து ஜெகதளா

Dsp 3/12/2021.

செல்லும் பிரதான சாலையில் உள்ள நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளையின் நேர் எதிரே உள்ள சாலையில் அமைந்துள்ள ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் முதலில் உள்ள கட்டிடம் இரண்டு தளங்களை கொண்டதாக உள்ளது. அதில் தரை தளத்தில் கார் பார்க்கிங்கும், மேலே உள்ள தளத்தில் கூட்டம் நடைபெறும் அறையும் உள்ளது. அடுத்ததாக இருந்த கட்டிடம் மூன்று அறைகளை கொண்டதாகவும், தென்கிழக்கு பார்த்தவாறும் உள்ளது. அந்த கட்டிதத்தின் வலதுபுறத்தில் இருந்த பதிவறை அறையில் தென்கிழக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையின் மேஜையில் ஒரு கம்ப்யூட்டர் உள்ளது. அந்த கம்ப்யூட்டர் ஆப்பரேட்டராக பின்னர் பெயர் விவரம் தெரிந்த தற்காலிக பணியாளராக திருமதி.சீதாலட்சுமி என்பவர் இருந்தார். அவரை விசாரிக்க தான் 18 வருடங்களாக இந்த அலுவலகத்தில் பணியில் இருப்பதாகவும், வெண்பா குழு மூலமாக மாத ஊதியம் வழங்குவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றதால், விசாரணைக்குப்பிறகு அந்த பணம் ரூ.100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த அறையில் தென்கிழக்கு பார்த்தவாறு நுழைவாயிலின் நேர் எதிரே இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த துப்புறவு பணியாளர் திருமதி.கிருத்திகா என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து பணம் ரூ.1,24,900/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க, ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சியில் செயல்பட்டுவரும் வெண்பா சுய உதவிக்குழு தனியார் நிறுவனம் மூலமாக வேலை செய்துவரும் தற்காலிக பணியாளர்கள் சுமார் 54 துப்புறவு பணியாளர்கள், குடிநீர் விநியோகிப்பவர்கள் மற்றும் அலுவலக தற்காலிக பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர். இவர்களுக்கு ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி குன்னூர் கனரா வங்கி அரசு கணக்கில் காசோலை எண்.738860 மூலமாக ஜெகத்ளாவில் உள்ள நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு NEFT மூலமாக வெண்பா சுய உதவிக்குழுவிற்கு 01.12.2021 ஆம் தேதி பணம் ரூ.5,81,688/- செலுத்தப்பட்டது என்றும், இன்று (02.12.2021) தானும், தற்காலிக துப்புறவு பணியாளராக இருந்துக்கொண்டு அலுவலக பணிகளை மேற்கொள்ளும்

DSP 3/12/2021

தனது தங்கை திருமதி.பரமேஸ்வரி ஆகிய இருவரும் ஜெகதளாவில் உள்ள நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைக்குச் சென்று வங்கி கணக்கு எண்.705959885-ல் காசோலை எண்.011007 மூலமாக தற்காலிக துப்புறவு பணியாளர்கள் 47 பேருக்கு ECS மூலமாக அவரவர் கணக்கு எண்ணிற்கு மொத்தம் பணம் ரூ.4,56,788/- அனுப்பியது போக வங்கி கணக்கு எண் இல்லாத துப்புறவு பணியாளர்களுக்கு நேரடியாக பட்டுவாடா செய்ய எடுத்து வந்த பணம் ரூ.1,24,900/- என்று கூறினார். இது சம்மந்தமாக விசாரணை மேற்கொண்டதில் குழுவில் உறுப்பினராக உள்ள திருமதி.பரமேஸ்வரி என்பவர் ஜெகதளாவில் உள்ள நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளையில் உள்ள தனிநபர் கணக்கு எண்.707411690-ற்கு செலான் மூலமாக மாற்றப்பட்டு, திருமதி.பரமேஸ்வரியின் வங்கி காசோலை எண்.016231 மூலமாக பணம் ரூ.1,24,900/- எடுத்துவரப்பட்டது என்று கூறினார். சம்மந்தப்பட்ட ஆவணங்களை சரிபார்த்ததில் அவர் கூறியது உண்மையென்று தெரியவந்ததால், அந்த பணம் ரூ.1,24,900/- வங்கி கணக்கு இல்லாத தற்காலிக துப்புறவு பணியாளர்களுக்கு பட்டுவாடா செய்ய அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் திருமதி.கிருத்திகாவின் ஹேண்ட் பேக்கை சோதனை செய்ததில் தனித்தனியாக பணம் ரூ.4,000/-, ரூ.9,000/- மற்றும் ரூ.6,250/- இருந்தது. இதைப்பற்றி விசாரிக்க ரூ.4,000/- மற்றும் ரூ.9,000/- குன்னூர் பாரத ஸ்டேட் வங்கி கிளையில் லோன் கட்டுவதற்காக வைத்திருந்த பணம் என்றும், ரூ.6,250/-ஐ பற்றி விசாரிக்க அதில் நேற்று (01.12.2021) ரூ.5,739/- குடிநீர் மற்றும் சொத்துவரி வசூல் செய்த பணம் என்றும் ரூ.511/- தனது சொந்த பணம் என்றும் கூறியதால், விசாரணைக்குப்பிறகு அந்த பணம் மொத்தம் ரூ.19,250/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கைக்கு அருகில் இருந்த சிவப்பு நிற துணிப்பையிலிருந்து பணம் ரூ.4,53,600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க ஜெகதளா தேர்வுநிலை ஊராட்சி, குன்னூர் கனரா வங்கி அரசு கணக்கில் காசோலை எண்.738862 மூலமாக ஜெகதளாவில் உள்ள நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு NEFT மூலமாக லில்லிமலர் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு 01.12.2021 ஆம் தேதி பணம் ரூ.4,53,600/- செலுத்தப்பட்டது என்றும், இன்று (02.12.2021) தானும், தற்காலிக துப்புறவு

3/12/2021.

பணியாளராக இருந்துக்கொண்டு அலுவலக பணிகளை மேற்கொள்ளும் தனது தங்கை திருமதி.பரமேஸ்வரி ஆகிய இருவரும் ஜெகதளாவில் உள்ள நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைக்குச் சென்று வங்கி கணக்கு எண்.210007870 காசோலை எண்.014538 மற்றும் செலான் மூலமாக திருமதி.ரதி என்பவரின் தனிநபர் கணக்கு எண்ணிற்கு மாற்றி திருமதி.ரதி என்பவரின் தனிநபர் கணக்கு எண்.704047712 காசோலை எண்.016482 மூலமாக பணம் ரூ.4,53,600/- எடுத்து வரப்பட்டது என்றும், முன்னுக்குப்பின் முரணாகவும், லில்லிமலர் என்ற ஒரு குழு செயல்படுவதாகவும், அதில் சுமார் 40 தற்காலிக பணியாளர்கள் பணிபுரிவதாக பெயர் பட்டியல் தயார் செய்து மாதந்தோறும் அரசு கணக்கிலிருந்து பணம் பெற்றுவருவதாகவும், வங்கியிலிருந்து பெற்று வந்த பணத்தை இளநிலை உதவியாளர் திரு.கருமலையப்பன் என்பவரிடம் கொடுத்துவிடுவதாகவும் திருமதி.கிருத்திகா கூறினார். லில்லி மலர் குழுவிற்கு உண்டான ஆவணங்கள் எதுவும் ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சியில் பராமரிக்கப்படவில்லை என விசாரணையில் தெரியவருகிறது. எனவே, பணம் ரூ.4,53,600/- அரசு பணத்தை கையாடல் செய்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பெயரில் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அவரது இருக்கைக்கு இடதுபுறமாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் விவரம் தெரிந்த தற்காலிக கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் திரு.பாலமுரளி என்பவர் இருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.111/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால், பணம் ரூ.111/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அந்த அறையில் வடகிழக்கு பார்த்தவாறு பின்னர் பெயர் விவரம் தெரிந்த பதிவறை எழுத்தர் திரு.ஆதில் ஷெரிப் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தனது மாமியாருக்கு மருந்து வாங்க வைத்திருந்ததாக தனது கைப்பேசியில் மருத்துவரின் மருந்து சீட்டை காண்பித்ததால், அந்த பணம் ரூ.1,600/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக வடகிழக்கு பார்த்தவாறு அலுவலகம்

DSP 3/12/2021

என்று எழுதப்பட்டிருந்த அறையில் முதலில் இருந்த கேபினிள் செயல் அலுவலரின் அறை இருந்தது. அவர் பணி மாறுதலில் சென்றுவிட்டதால், அந்த இருக்கை காலியாக இருந்தது. அடுத்ததாக வடகிழக்கு பார்த்தவாறு அலுவலகம் என்று எழுதப்பட்ட அறையில் வடகிழக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த இளநிலை உதவியாளர் திரு.கருமலையப்பன் என்பவர் இருந்தார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது சட்டைப்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.350/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தன்னுடைய சொந்த பணம் என்று கூறியதால், விசாரணைக்குப்பிறகு பணம் ரூ.350/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் லில்லி மலர் சுய உதவிக்குழுவிற்கு வங்கியிலிருந்து எடுத்த வந்த பணம் ரூ.4,53,600/-ஐ பற்றி அவரிடம் விசாரிக்க அலுவலகத்தில் பணிபுரியும் துப்புறவு பணியாளர் திருமதி.கிருத்திகா மற்றும் தற்காலிக துப்புறவு பணியாளர் திருமதி.பரமேஸ்வரி இருவரும் வங்கியிலிருந்து எடுத்து வந்து என்னிடம் கொடுப்பார்கள். அந்த பணத்தில் மாதந்தோறும் உதகமண்டலத்தில் உள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், செயல் அலுவலர் மற்றும் இதர அலுவலக செலவுகளுக்கு பயன்படுத்திக்கொள்வோம் என்று கூறினார். அவரது இருக்கைக்கு அருகே இருந்த இருக்கை பில் கலெக்டர் திரு.வருண் என்பவரின் இருக்கை காலியாக இருந்தது. அவரைப்பற்றி விசாரிக்க அவர் விடுப்பில் சென்றிருப்பதாகவும், இவ்வலுவலகத்தில் தனிநபர் பணப்பதிவேடு எதுவும் பராமரிக்கப்படுவதில்லை எனவும் இளநிலை உதவியாளர் திரு.கருமலையப்பன் கூறினார். இந்த திடீர் சோதனையானது 02.12.2021 ஆம் தேதி 14.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 19.15 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் சோதனையில் 1) கணக்கில் வராத பணம் ரூ.4,53,600/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து அறநூறு மட்டும்), பதிவறை எழுத்தர் திரு.ஆதில் ஷெரிப் என்பவரால் பராமரிக்கப்பட்டு வரும் 1) சான்றொப்பமிட்ட அலுவலக பணியாளர்களின் வருகைப்பதிவேட்டின் நகல் (பக்கம் 13), 2) சான்றொப்பமிட்ட

DSP 3/12/2021

பரப்புரையாளர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 13), 3) சான்றொப்பமிட்ட துப்புறவு பணியாளர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 13), 4) சான்றொப்பமிட்ட குடிநீர் விநியோக பணியாளர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 13) ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இளநிலை உதவியாளர் திரு.கருமலையப்பன் அவர்களால் பராமரிக்கப்பட்டு வரும் 1) சான்றொப்பமிட்ட 30.11.2021-ம் தேதியிட்ட நாளேடு (Day Book), 2) சான்றொப்பமிட்ட வெண்பா சுய உதவிக்குழுவின் தற்காலிக துப்புறவு பணியாளர்களுக்காக பராமரிக்கப்பட்டு வரும் வருகைப்பதிவேடு (பக்கம் 6, 7), 3) கனரா வங்கியின் Executive Officer Jegathala என்ற அசல் காசோலை புத்தகம் 738801 முதல் 738900 வரை (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 738801 முதல் 738823 மற்றும் 738825 முதல் 738841 வரை), 4) ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி வெண்பா குழுவின் Bank Payment Voucher அசல் (6 தாள்கள்), 5) ஜெகதளா தேர்வுநிலை பேரூராட்சி லில்லிமலர் குழுவின் Bank Payment Voucher அசல் (5 தாள்கள்), ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. துப்புறவு பணியாளர் திருமதி.கிருத்திகா என்பவரிடமிருந்து 1) வெண்பா குழுவின் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 010921 முதல் 011020 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 010921 முதல் 010986 மற்றும் 010988 முதல் 011007), 2) திருமதி.பரமேஸ்வரி என்பவருடைய தனிநபர் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 016221 முதல் 016240 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 016221 முதல் 016231), 3) லில்லிமலர் SHG குழுவின் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 014521 முதல் 014540 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 014521 முதல் 014534 மற்றும் 014535 முதல் 014538), 4) திருமதி.ரதி என்பவருடைய தனிநபர் வங்கி கணக்கு காசோலை புத்தகம் 016481 முதல் 016500 (உபயோகப்படுத்தப்பட்ட காசோலைகள் 016481 மற்றும் 016482), 5) சான்றொப்பமிட்ட நவம்பர் மாதத்திற்கான வெண்பா குழுவின் தற்காலிக துப்புறவு பணியாளர்களுக்கு வங்கியில் ECS மூலம் மாத சம்பளம் செலுத்தியதற்கான பட்டியல் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகம் சம்மந்தப்பட்ட அரசு பணம் எதுவும் அலுவலகத்தில் இன்றைய தேதியில் எதுவும் இல்லை என்றும்

DSP 3/12/2021

கொடிநாள் தொடர்பாக பணம் எதுவும் வசூல் செய்வதில்லை, வரைவோலை மூலம்தான் கொடிநாள் வசூல் செய்யப்படுவதாக இளநிலை உதவியாளர் திரு.கருமலையப்பன் தெரிவித்தார். இந்த திடீர் சோதனை செயல்முறையில் திரு.R.குமாரராஜா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு), மாவட்ட ஆய்வு குழு அலுவலர் ஆகிய நான், நீலகிரி மாவட்டம், காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.M.சுபாஷிணி, இளநிலைஉதவியாளர் திரு.V.கருமலையப்பன் துப்புறவு பணியாளர் திருமதி.R.கிருத்திகா ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் சோதனை செயல்முறையானது தலைமைகாவலர் திரு.நா.சக்தி என்பவர் கணினியில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 03.12.2021-ம் தேதி காலை 11.30 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2021/AC/NI u/s 409 IPC, 13(2) r/w 13(1) (c) and 13(1) (a) of PC Act 1988 as amended as Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரு.4,53,600/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறநூறு மட்டும்) ஆகியவற்றை கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

DSP 3/12/2021